28th January 1972]

முந்திரிச் சாராயம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ருட்டியில் முந்திரிச் சாராயம் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கு செயற்குறிப்புகள் ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) முந்திரிப் பழங்களிலிருந்து அருந்தத்தக்க மதுவினை பண்ருட்டியில் தயாரிப்பதற்கு தங்களுக்கு அனுமதி வழங்குமாறு இதுவரை இருவர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர்:—

1. திருவாளர்கள் அருணா சுகர்ஸ் லிமிடெட், சென்னை.

2. திரு. எ. டி. சில்வா, சென்னை.

இவர்களது வேண்டுகோள்பற்றி வருவாய்த்துறை (ஆயத்தீர்வை-மதுவிலக்கு) வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கந்தர்வக் கோட்டை வழியாகப் புதுக்கோட்டை போகும் பாதையில் முந்திரிக் காடுகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் முந்திரிச் சாராயத்தைத் தயாரிப்பதற்கு அரசு வழிமுறைகளை ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கான விண்ணப்பம் அனுப்புவதற்கு உறுப்பினர் முன்வந்தால் பரிசிலிக்கப்படும்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, முந்திரிச் சாராயத் தொழிற்சாலையை அரசே நடத்தி அதன் மூலமாக வருமானத்தைப் பெறுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசு நடத்துகிற அளவுக்கு இதில் அரசு முந்திரிக் கொட்டையாக இருக்க விரும்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: முந்திரியிலிருந்து பென்னி என்ற பானத்தைத் தயார் செய்து கோவாவில் நிறைய விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் இதை விரும்பமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, முதலமைச்சர் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அனுபவம் இல்லை.

Skin and Hides Market

* 40 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that the skin and hides market was paralysed in this State during the last week of August, 1971; and

(*b*) if so, the reasons therefor?

[28th January 1972

தோல் அங்காடிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, ஆகஸ்டு கடைசி வாரத்தில் இம் மாநிலத்தில் தோல் அங்காடிகள் முடங்கிக் கிடந்தன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Iron Ore

* 41 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Japanese Team has been requested to undertake any experiment into the iron ore findings in Tiruvannamalai in North Arcot District;

(b) whether it has submitted its report; and

(c) if so, the details thereof?

இரும்புக் கனிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் இரும்புக் கனிகள் கிடைப்பது பற்றிச் சோதனைகள் நடத்தும்படி ஜப்பானியக் குழு ஏதாவது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா?

(இ) அது தன்னுடைய அறிக்கையை பணிந்தனுப்பியுள்ளதா?

(உ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Nadu Industrial Development Corporation

* 42 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Union Government have issued letters of intent to the Tamil Nadu Industrial Development Corporation for the manufacture of Tyres and Tubes; and

(b) if so, the details thereof?

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டயர்கள், டியூப்கள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு மத்திய அரசு, அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS